# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




**மன்னா – 10** ஆகஸ்ட் 2020 **பிரதி – 5**



# ஆயர் மடல்



பாலைவன மன்னா வாசகர்களே! இறை இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களும், வணக்கங்களும்!

**முழு ஊரடங்கு**

நாம் வசிக்கும் ஓமான் தேச அரசு கொடிய வைரஸ் பரவாமல் தடுக்கும் வகையில் பல சட்டத்திட்டங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. நாமும் இணைந்து செயல்படுவோம். தேசத்தின் விடுதலைக்காகவும், பொருளாதார வளர்ச்சிக்காகவும், மக்கள் வாழ்வு காக்கப்படவும் ஜெபித்துக்கொள்வோம்.

தமிழகத்திலும் இம்மாதம் முழுவதும் தொடர் கட்டுபாடுகள் விதிக்கப்பட்டிருப்பதை அறிவோம். நமது குடும்பத்தினர் பாதுகாக்கப்படவும், சமாதானமாக வாழவும், சமுதாய சீர்கேடுகள் விலகவும் பாரத்தோடு ஜெபித்துக்கொள்வோம்.

**இறைவேண்டல்களில் இணைவோம்**

நமது திருச்சபை மக்களுக்காகவும், நமது திருச்சபையால் தாங்கப்படும் மிஷனெரிகளுக்காகவும், திருச்சபையின் தேவைகளுக்காகவும் இறை வேண்டல்களில் இணைந்துக்கொள்வோம். திருச்சபையார் இணைந்து ஜெபிக்கும் இறைவேண்டல் தினமும் காலை 9 மணி முதல் 10 மணிவரை நடைபெறும். அனைவரும் இல்லங்களில் இருந்தபடியே கலந்துக்கொள்வோம். ஜெபக்குறிப்புகளை போதகரிடம் தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறேன்.

தனிப்பட்ட இறைவேண்டல், குடும்ப இறைவேண்டல், குழு இறை வேண்டல்களில் கொடிய வைரஸ் தாக்கம் நீங்கவும், உலக நாடுகள், இந்திய தேசம், ஓமான் தேசம், பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்புகள், குடும்ப பாதுகாப்பு, பிள்ளைகளின் உயர்கல்விகள் இவைகளை மனதிலே கொண்டு ஜெபிக்க அன்பாய்க் கேட்கிறோம்.

**இணையதளம் வழி இறைஅன்பு**

நமது திருச்சபையின் இறைசெய்திகள், இறைத்தொழுகைகள், இறைவேண்டல்கள், திருமறை வினாவிடைகள், வாக்குத்தத்தங்கள் போன்றவை மிகச்சிறப்பாக ஒருங்கமைவு செய்யப்பட்டு வெளியிடப்பட்டு வருகிறது. ஜெபியுங்கள், பங்குபெறுங்கள், இறைநாமத்தை மகிமைப்படுத்துங்கள்.

ஆகஸ்ட் மாதம் ஆசிமிக்க மாதமாய் அமையவும், இறை அருள்பெறும் மாதமாகவும் அமைய அன்பின் வாழ்த்துக்கள். இறை ஆசி உங்கள் அனைவரையும் நிரப்புவாராக!

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

## ஆயர் அருளுரை

## செவிகள்

**"நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்".** (ஏசாயா 30:21)

**"கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்"** (மத்தேயு 11:15, 13:9, 13:43).




கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதம் **செவிகள்** என்னும் தலைப்பில் தியானிக்கின்றோம். செவிகள், காதுகள், கேள்வி, கேட்கக்கடவன் இவைகள் எல்லாம் உணர்வின் ஒரு வகை நிகழ்வை உள்வாங்கும் ஒன்று என்பதை புரிந்துகொள்ளலாம்.

உலகில் பல்வேறு சத்தம், ஒலி, ஓசை, பேச்சு, பாடல், இசை, இடி, எக்காளம் போன்றவை ஒவ்வொரு நாளும் நாம் கேட்கிறோம். நமது செவிகள் கேட்கிறது. அவைகளில் எவை நமக்கு பயனுள்ளவை, எது பயனற்றவை என முடிவு செய்யும் திறன் அல்லது மனப்பான்மை நம்முடையது.

கெட்ட வார்த்தைகளும் கேட்கிறோம். நல்ல வார்த்தைகளும் கேட்கிறோம். எது நாம் வெளிப்படுத்த வேண்டும் என்பதையும் எதை தொடர்ந்து கேட்கவேண்டும் என்பதையும் முடிவெடுத்து தொடரவேண்டும். குழந்தைகள் இதிலே தவறுவது வெளிப்படையாக தெரிகிறது. கெட்ட வார்த்தையை குழந்தை கூறும்போது, குழந்தை உளவியலாளர் சொல்கிறார் அது கெட்ட வார்த்தை அல்ல கேட்ட வார்த்தை என்று,

காதுகளில் கேட்கும் சத்தம் நம்மை நெறிப்படுத்தும் என்பதை இயேசு நாதர் **"கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்"** என்று திருமறையில் பல இடங்களில் குறிப்பிடுவதை காணமுடிகிறது.

யோவான் நற்செய்தி நூல் 10-ம் அதிகாரத்திலுள்ள மேய்ப்பனும், ஆடுகளும் என்னும் பகுதிமூலம் இணைந்து தியானிப்போம்.

## சத்தம் கேட்கும் ஆடுகள்

**“அவன் தன்னுடைய ஆடுகளை பேர் சொல்லி கூப்பிட்டு அவைகளை வெளியே நடத்திக்கொண்டு போகிறான்” (யோவான் 10:3).**

மேய்ப்பன் தன் ஆடுகளை பெயர் சொல்லி கூப்பிடும் சத்தம் கேட்கும் ஆடுகள், மேய்ப்பனால் நடத்தப்படுகிறது. “தன்னுடைய ஆடுகளை” என்னும் வார்த்தை மறைமுகமாக நமக்கு காட்டி நிற்பது தன்னுடையவை அல்லாத ஆடுகளும் தொழுவத்தில் உள்ளது. அது ஒருவேளை பிறருடைய ஆடுகளாக இருக்கலாம். ஆனால் தன்னுடைய ஆடுகளில் பெயர் சொல்லி கூப்பிடும்போது அந்த சத்தம் அந்த ஆட்டிற்கு கேட்கவேண்டும் என்னும் உண்மை வெளிப்படுகிறது.

பெயர் சொல்லி கூப்பிடும்போது கேட்காத ஆடுகள் மேய்ப்பனால் வெளியே நடத்திக் கொண்டுபோகப்படுவது இல்லை. எரேமியா தீர்க்கதரிசி 5:21-ல் “காதுகள் இருந்தும் கேளாமலுமிருக்கிற அறிவில்லாத ஜனங்களே, கேளுங்கள்” என்கிறார். கேளாமல் இருப்பது அறிவில்லா தன்மை என்பதை வெளிப்படுத்துகிறார்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி குறிப்பிடும்போது 12:2-ல் “கேட்கும்படிக்கு அவர்களுக்கு காதுகள் இருந்தாலும் கேளாமல் போகிறார்கள். அவர்கள் கலக வீட்டார்” என்று கர்த்தரின் சத்தம் கேட்காத ஜனங்களை குறிப்பிடுவதை காணமுடிகிறது. நாம் கர்த்தரின் சத்தம் கேட்கிறோமா? அவர் சத்தம் கேட்க நமது செவிகள் ஆயத்தமாக உள்ளதா?

## செவி கொடுக்கும் ஆடுகள்

**“வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான். ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது” (யோவான் 10:3).**

மேய்ப்பனின் சத்தத்தை ஆடுகள் கேட்பது மட்டுமல்ல அதற்கு செவிகொடுக்கவேண்டும் என மேய்ப்பன் விரும்புகிறார். ஆண்டவருடைய சத்தம் ஆண்டவருடைய பிள்ளைகள் கேட்கிறார்கள். அநேக வேளைகளிலே அதற்கு செவிகொடுக்க தவறுகிறார்கள் என ஆண்டவர் வேதனைப்படுகிறார். இயேசு கிறிஸ்து இப்படிப்பட்ட மக்களுக்காக வேதனையுடன் மத். 13:13-ல் “அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேட்காதவர்களாயும் உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால் நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன்”

என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார். கேட்டும் உணராத மக்கள் என குறிப்பிடுவதுடன் அறுப்புகாலத்திலே நெருப்பிலே போடப்படும் பதருக்கு ஒப்பானவர்கள் என கேட்டு செவிகொடுக்காத மந்த இருதயமுள்ளவர்களைக் குறிப்பிடுகிறார்.

எனவே இயேசு கிறிஸ்து போதனை செய்யும்போதும், வேதம் படிக்கும்போதும் (லூக். 4:21, லூக். 7:1) தம்முடைய வார்த்தைகளையெல்லாம் ஜனங்களுடைய காதுகள் கேட்கும்படி சொல்லி முடித்தார் என வேதம் சொல்லுகிறது. காரணம் ஆண்டவருடைய எதிர்பார்ப்பு ஜனங்கள் செவிகொடுத்து செயல்படவேண்டும் என விரும்புகிறார். நாம் எப்படி இருக்கிறோம்? ஆண்டவருடைய சத்தம் திருமறைமூலம், திருச்சபை மூலம், காணொளி காட்சிகள் மூலம் பெறும்போது சத்தத்துக்கு செவிகொடுக்கிறவர்களாய் இருக்கிறோமா?

## சத்தத்துக்கு பின்செல்லும் ஆடுகள்

**"அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்ட பின்பு அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான். ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியால் அவனுக்கு பின்செல்லுகிறது" (யோவான் 10:4)).**

மேய்ப்பனின் சத்தத்தை அறிந்திருக்கும் ஆடுகளை இப்பகுதி குறிப்பிடுகிறது. இன்று சத்தத்தை அறியவேண்டும். இயேசுவின் சத்தம், பிசாசின் சத்தம், திருமறையின் சத்தம், உலகத்தின் சத்தம், ஆண்டவரின் சத்தம், ஆஸ்தியின் சத்தம், போதகரின் சத்தம், நண்பனின் சத்தம் என சத்தங்களையும், அதின் சத்தியங்களையும் அறியும் ஆடுகளாக இருக்கவேண்டும்.

"அழைக்கும் சத்தமெல்லாம் ஆண்டவரின் சத்தமல்ல; கிடைக்கும் ஆசியெல்லாம் ஆண்டவரால் வருவதல்ல; நடக்கும் பாதையெல்லாம் ஆண்டவரின் பாதையுமல்ல; பெறும் உறவெல்லாம் ஆண்டவரின் உறவுமல்ல; நின்று, நிதானித்து, உணர்ந்து, அறிந்து, வாழும் வாழ்வே உயர்ந்தது என்கிறார் இறையியலாளர்.

"கர்த்தாவே எங்கள் காதுகள் கேட்ட எல்லாவற்றின்படியும் தேவரீருக்கு நிகரானவர் இல்லை. உம்மைத் தவிர வேறு தேவனும் இல்லை" என 1நாளா. 17:20-ல் குறிப்பிடுவதைக் காண முடிகிறது. ஆண்டவருடைய சத்தம் அறிந்து ஆண்டவருக்கு பின்செல்ல திருமறை அழைக்கிறது.

அப்போஸ்தலர் 17:20-ல் "நூதனமான காரியங்களை எங்கள் காதுகள் கேட்கப் பண்ணுகிறாய்; அவைகளின் கருத்து இன்னதென்று அறிய

மனதாயிருக்கிறோம் என்றார்கள்'' இப்படி அத்தேனே பட்டண மக்கள் கூறக் காரணம் பவுல் இயேசுவையும், உயிர்த்தெழுதலையும் பிரசங்கித்தான். பின்னர் அனைத்து மக்கள் கேட்க ''நீங்கள் மிகுந்த தேவ பக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால் நான் சுற்றித்திரிந்து உங்கள் ஆராதனைக்குரியவைகளை கவனித்துப் பார்த்தபொழுது அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன். நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்'' (அப். 17:22,23) என ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிவித்து அவர் சத்தத்தை அறிந்துகொண்டு அம்மக்களை கர்த்தரின் சத்தத்தை பின்தொடர வழிவகை செய்தார்.

இன்று நாமும் நமக்கு ஆண்டவர் கொடுத்திருக்கும் காதுகளைக் கொண்டு கர்த்தரின் சத்தம் கேட்க அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று உணர்வோம். கர்த்தரின் சத்தம் கேட்பதோடு நின்றுவிடாது அதை செய்யத் தீர்மானிப்பதும் நமது கடமையாகும். இறை வார்த்தைகளுக்கு செவிகொடுக்க அழைக்கப்படுகிறோம்.

செவிகொடுத்து பின்தொடரும்போதுதான் வாழ்வில் பாதையின் நன்மைகளை கர்த்தரின் கரத்திலிருந்து புசிக்கமுடியும் என்பதை அறிவதுடன் நாம் கர்த்தரின் சத்தத்தை மற்றவர்களுக்கும் அறிவித்து அவர்களையும் ஆண்டவரை பின்தொடரச்செய்யும் பொறுப்பும் நம்முடையது என அறிந்து செயல்படுவோம்.

ஆண்டவரின் ஆசியால் நிரப்பப்படுவோம்! ஆமென்.

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

## சிறுவர் பகுதி

## பெலவீனமாக்கும் செவிகளின் செய்தி

ஒரு ஊரில் குத்துச்சண்டை வீரர் ஒருவர் இருந்தார். அந்தப் பகுதியில் அவரை வெல்ல யாருமே இல்லை. சில குத்துக்களிலேயே எதிரியை வீழ்த்திவிடும் வலிமை அவருக்கு இருந்தது. தோல்வி என்பதையே அறியாமல் வாழ்ந்து வந்தார்.

இப்போதெல்லாம் அவருடன் போட்டியிட யாருமே முன்வருவதில்லை! அவருடைய எதிரிகள் எவ்வளவோ விதங்களில் முயற்சி செய்தும்கூட அவரை வீழ்த்த முடியவில்லை. நல்ல உடற்பயிற்சி, சத்தான உணவு, தேவையான அளவு உறக்கம் என்று தன்னுடைய உடலை நன்றாகப்

பேணி வந்ததால், எதிரிகள் அவரை வீழ்த்த வேறு ஏதாவது வகையில் திட்டம் வகுக்க ஒன்று கூடினார்கள். பலவிதமான ஆலோசனைகளை அவர்கள் கூடிப் பேசினார்கள். ஏதாவது செய்து அவரைக் கொன்று விட்டாலும் அவர் வீரர்களுக்கு




எல்லாம் முன்மாதிரி என்று பேசப்பட்டு அழியாத புகழைப் பெற்றுவிடுவார். எனவே அந்த யோசனை கைவிடப்பட்டது. குடிப்பழக்கம் போன்ற கெட்ட பழக்கங்களை அவருக்கு அறிமுகப்படுத்தலாம் என்று முயற்சிசெய்து, அயல்நாட்டு போதை வஸ்துக்களை அவருக்கு பரிசளிக்க முயன்றபோது அவர்களுக்கு முன்பாகவே அவர் அதை உடைத்து நொறுக்கி அவர்களை அவமானப்படுத்தி அனுப்பினார். உருப்படியாக எந்த ஒரு யோசனையும் கிடைக்காத நிலையில் அவர்களுக்குள் ஒரு முடிவெடுத்தார்கள். எதையாவது செய்து அவரைப் போட்டியில் வீழ்த்தவேண்டும்.

எனவே அவரை வீழ்த்துபவருக்கு 10 லட்சம் பரிசு கொடுப்பதாக வாக்களித்தார்கள். பெரிய தொகைதான், இருந்தாலும் அவரை வீழ்த்த இதைவிட அதிகமாக செலவுசெய்யவும் அவர்கள் தயாராக இருந்தார்கள். இந்தச் செய்தி காட்டுத்தீ போலப் பரவியது.

இது புதிதாய் சண்டைப் பயிற்சி செய்துவரும் ஒரு இளைஞனின் காதிலும் விழுந்தது. 10 லட்சம் பரிசுத்தொகையாக அறிவிக்கப்பட்டாலும் அந்த வீரரின் வலிமை தெரிந்திருந்ததால் போட்டிக்கு வர யாருமே முன்வரவில்லை. இந்த நிலையில் அந்த புதிய இளைஞன், தான் போட்டிக்கு வருவதாக முன்வந்தான். பலரும் அவனை பயமுறுத்தி அவரிடம் மோதவேண்டாம் என்று அறிவுரை கூறினார்கள். அவனோ தன் முடிவில் உறுதியாக இருந்தான். வீரரும் அவருடன் சண்டையிட சம்மதித்து விட்டார்.

போட்டியின் நாள் அறிவிக்கப்பட்டது. புதிய இளைஞன் தன்னுடைய நெருக்கமான நண்பர்களை வரவழைத்தான். அவர்களிடம் தனக்காக உதவிச் செய்யும்படி சில விஷயங்களைக் கூறினான். அவன் எதற்காக அப்படிச் சொன்னான் என்று அவர்களுக்கு புரியவில்லையென்றாலும் நண்பனின் வெற்றிக்காக எதையும் செய்யத் தயாராக இருந்ததால் அவன் சொன்னதை அப்படியே செய்தார்கள். அதில் ஒருவன், வீரரின் வீட்டுக்குப் பழங்களுடன் போய் அவர் போட்டியில் வெற்றிப்பெற வாழ்த்துக்கள் சொன்னான். அவரும் சந்தோஷமாக அவற்றைப் பெற்றுக்

கொண்டு நன்றி சொன்னார். வந்தவன் திடீரென்று, “என்னய்யா ஆச்சு உங்களுக்கு?” பேசும்போதே இப்படி மூச்சு வாங்குதே, கல்லு மாதிரி இருந்தீங்களே, உடம்பை பாத்துக்குங்க என்றுச் சொல்லி கிளம்பினான். எனக்கு மூச்சு வாங்குதா? நான் நல்லாதானே பேசுறேன்? அவருக்கு குழப்பம் வந்துவிட்டது. மறுநாள் அதிகாலை அவர் வீதியில் ஓட்டப்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது திட்டப்படி இன்னொரு இளைஞன் அவருக்கு எதிர்ப்பட்டு வணங்கினான். ஐயா, போட்டியில் கலந்துக்க போறதா கேள்விப்பட்டேன், நான் உங்க தீவிர ரசிகன். இப்பவும் நீங்கதான் ஜெயிக்கப்போறீங்க, அதுல சந்தேகமே இல்லை. ஆனாலும் முன்னால உங்க ஓட்டத்துல இருந்த வேகமும், வலிமையும் இப்ப இல்லையே? உடம்பு சரியில்லையா? என்று கேட்டுவிட்டு நகர்ந்தான். என்ன எல்லாரும் இப்படி கேக்குறாங்க? இப்போது சிறிதாய் பயம் துளிர்விட்டது.

போட்டி துவங்கும் நேரம் வந்தது. பலரும் அவருக்கு வாழ்த்துச் சொல்லி உற்சாகப்படுத்தினர். அவர் மேடையேறப் போகும்போது எதிராளியான இளைஞனின் நண்பனான மற்றொரு இளைஞன் கையில் பூக்கொத்துடன் வந்து அவரை வாழ்த்தி கைகுலுக்கினான். என்னய்யா, எப்பவும் உங்க பிடி இரும்பு மாதிரி இருக்கும் இப்ப ரொம்பவும் தளர்ந்து போச்சே, என்னாச்சு உங்களுக்கு? என்று கேட்டுவிட்டு விடைபெற்றான். அவ்வளவுதான் வீரர் முற்றிலுமாக சோர்ந்துபோனார். போட்டி துவங்கியது. அவர் வேகமாக தாக்குதலை ஆரம்பித்தாலும், இனம்புரியாத சோர்வு அவரை மேற்க்கொண்டது. இளைஞனின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் பலவீனமாய் சரிந்தார். எல்லாரும் ஓடிவந்து இளைஞனின் சாதனையையும், வீரத்தையும் பாராட்டினார்கள். அவனோ நன்றிப் புன்னகையோடு தன் நண்பர்களின் முகத்தை ஏறிட்டான்.

பலருடைய வாழ்வில் வந்துவிட்ட வியாதியைவிட, வந்துவிடுமோ என்று எண்ணி பயப்படுகிற வியாதியே பலரை கீழே தள்ளி வீழ்த்திவிடுகிறது.

பலப்படுவோம் எண்ணங்களால், நம்பிக்கைகளால்! உடல் அளவில் பலவீனப்பட்டாலும், மனதளவில் மிருக பலத்தோடு இருப்போம். பிறரின் வார்த்தைகளால் பயப்படவும் வேண்டாம், பலவீனப்படவேண்டாம். கொரோனா வந்துவிடும், நமது வாழ்வு முடிந்துவிடும் என்ற எண்ணமே நம்மை கொன்றுவிடும். அந்த கெட்ட எண்ணங்களை தூக்கி வீசிவிட்டு நமது எதிர்கால திட்டங்கள் நோக்கி பயணம் செய்வோம். ஒரு நல்ல கருத்தை விதைத்து உள்ளேன். அதை மனதில் கொள்க.

**அன்புடன் போதகர்**

## செவிகொடுக்க விரும்பும் பரம தகப்பன்

தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார் (நீதி. 3:12).

ஒரு சிறு கிராமத்தில் ஒரு பெண், தான் போகும் வழியில் ஒரு ஆட்டு மந்தையை கடந்து போனாள். அங்கு அவள் பார்த்தபோது, தனியாக ஒரு ஆடு அங்கிருந்த வைக்கோல் போரின் மேல் படுத்திருப்பதைக் கண்டாள்.



அதனுடைய காலில் கட்டு போடப் பட்டிருந்தது. அப்போது அங்கிருந்த மேய்ப்பனிடம், ஏனையா இந்த ஆட்டிற்கு காயம் ஏற்பட்டது? எப்படி அதன் கால் உடைந்துபோனது? என்று கேட்டாள். அப்போது அந்த மேய்ப்பன், அம்மா, நான்தான் அதன் காலை உடைத்தேன் என்று சொன்னபோது அந்த பெண் மிகவும் ஆச்சரியப்பட்டாள். அப்போது அந்த பெண்ணிடம், அந்த மேய்ப்பன் என்னிடம் உள்ள ஆடுகளிலேயே இந்த ஆடு மிகவும் வழிதப்பி போய்கொண்டு இருந்தது. இந்த ஆடு என் சத்தத்தை கேட்பதே கிடையாது. என் பின்னே வருவதும் கிடையாது. ஆபத்தான குன்றுகளின் விளிம்பில் நின்றுகொண்டு, நான் கூப்பிட்டாலும் வருவது கிடையாது. எல்லாவற்றிற்கும் மேலாக மற்ற ஆடுகளையும் வழிதப்பி போக செய்கிறது. ஆகவே அதன் காலை நான் உடைக்க நேர்ந்தது. நான் அதன் காலை உடைத்த முதல்நாள் அதற்கு உணவுகொடுக்க நான் முயன்றபோது அது என்னை கடிக்க வந்தது. என் மேல் அதற்கு மிகவும் கோபம் இருந்தது. ஆகவே நான் அதை இரண்டுநாள் அப்படியே பட்டினியாய் போட்டுவிட்டேன். மூன்றாவது நாள் நான் அதற்கு உணவு கொண்டு வந்தபோது, அது உணவை ஏற்றுக்

கொண்டது மாத்திரமல்ல, என் கையை நக்கி, தனது அன்பையும், பாசத்தையும் வெளிப்படுத்தியது. இந்த ஆடு சரியாக நடக்க ஆரம்பிக்கும்போது, இது மற்ற ஆடுகளுக்கு முன்மாதிரியாக இருப்பது மட்டுமல்ல, மற்ற எந்த ஆடுகளையும் விட என் சத்தத்திற்கு உடனே செவிகொடுத்து கீழ்ப்படியும் என்று கூறினார்.

## செவிகொடுக்கும்படி வழிநடத்துகிறார்

அநேகமுறை நாமும்கூட இந்த ஆட்டைப்போலத்தான் இருக்கிறோம் அல்லவா? நம் வாழ்வில் சிட்சைகள் வரும்போது அல்லது பாடுகள் வரும்போது ஏன் இது வந்தது என்று முறுமுறுக்கிறவர்களாய் நாம் இருக்கிறோம். ஆனால் வசனம் நமக்கு தெளிவாகக் கூறுகிறது. அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள். இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மை சிட்சிக்கிறார் (எபிரெயர் 12:9-11). இந்த வசனம் எத்தனை சரியாக, நாம் எதற்காக சிட்சிக்கப்படுகிறோம் என்பதை குறித்து தெளிவாக எழுதியிருப்பதைப் பாருங்கள். இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்; நம்மை வழிநடத்துகிறார். நாம் அவருடைய பிள்ளைகளாய் இருக்கும்போது, நாம் அவர் வழியில் நடவாமல் வழிதவறி போகும்போது, நாம் அவருடைய சத்தத்திற்கு செவிகொடுக்கவேண்டும் என்பதற்காக சில சிட்சைகளை அனுமதிக்கிறார். ஆனால் எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்.

## செவிகொடுக்கும்படி அனுமதிக்கிறார்

சில வேளைகளில் நாம் கலங்கி ஏன் எனக்கு மட்டும் இந்த பிரச்சனை? என்று கதறி, கண்ணீர் விடுகிறவர்களாயிருக்கிறோம். அப்போது நம்மை நாமே சோதித்து பார்த்து, ஒரு வேளை நாம் கர்த்தருடைய வழிகளில் இருந்து மாறி போயிருந்தால் நாம் அவரிடத்தில் திரும்பும்படியாகவே கர்த்தர் அனுமதித்தார் என்று நினைத்து கர்த்தரிடத்தில் திரும்புவோம். தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார். அவர் நம்மை நேசிப்பதினால்தான் அந்த சிட்சையை அனுமதிக்கிறார். அந்த ஆட்டைப்போல முதலில் அந்த சிட்சை நமக்கு கோபத்தை உண்டாக்கினாலும், நாம் எதினால் சிட்சிக்கப்படுகிறோம் என்பதை உணரும்போது, அந்த சிட்சைக்கு நம்மை பாத்திரமாக தேவன் தெரிந்துகொண்டாரே என்று நம்மை மகிழ்வடையச் செய்யும்.

## செவிகொடுக்கும்படி சிட்சிக்கிறார்

நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? (எபிரெயர் 12:7). தகப்பன் எந்த மகனையாவது மகளையாவது அடித்தால், உடனே அந்த பிள்ளை, நீர் என்னை அடித்தபடியால் இனி நீர் எனக்கு தகப்பனல்ல என்று சொல்லுமா? இல்லை. எத்தனைதான் அடித்தாலும் அந்த தகப்பன் அந்த பிள்ளையை நேசிப்பதால்தான் அடிக்கிறார் என்பதை அந்த பிள்ளை பின்னர் புரிந்துகொள்ளும். என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே. அவர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்துபோகாதே (நீதி. 3:11). கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாமல், சோர்ந்துபோகாமல் நாம் அவருடைய பிள்ளைகளாய் இருப்பதால்தான் நம்மை சிட்சிக்கிறார் என்பதை உணர்ந்து, நம்முடைய பாடுகளின், உபத்திரவங்களின் மத்தியிலும் தேவன் நம் தகப்பனாக நம்முடைய பரிசுத்தத்திற்காகவே சிட்சிக்கிறார் என்பதை புரிந்து, கர்த்தருடைய வழிகளில் நடப்போம்.

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## மனிதர்களை தேடிய மாமனிதர்கள் ~ யோவான்

### அன்பு ஒன்றே..



மண்ணில் :
விண்ணில் : கி. பி 101
ஊர் :
நாடு : பாலஸ்தீனா
தரிசன பூமி : பத்மு, எபேசு

பத்மு என்னும் தீவு, எபேசு பட்டணத்துக்கு அருகில் உள்ளது. 748 அடி உயரம், 14 மைல் அகலம் கொண்டது. இத்தீவில்தான் இயேசுவின் சீடர் யோவான் நாடு கடத்தப்பட்டு சிறை வைக்கப்பட்டார். இங்கு கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டார். அப்பொழுது இவருக்குக் கிடைக்கப்பெற்ற தரிசனமே வெளிப்படுத்தல் விசேஷம்.

யோவான் என்பதற்கு ஆண்டவரின் வெகுமதி என்பது பொருள். இயேசு கிறிஸ்துவின் மிக அன்பான சீடன் என்றழைக்கப்பட்ட இவர், இயேசுவின் மரணம் மட்டும் உடன் இருந்தார். மற்ற சீடர்கள் எல்லாம் ஓடிவிட இவரோ, இயேசுவின்மேல் மிகுந்த அன்பு கொண்டிருந்தார்.

அன்பைப் பற்றியே போதித்த இயேசுவை தன் வாழ்விலே காட்டினார். தன் வாழ்நாளிலும் அன்பைப் பற்றியே போதனை செய்தார். எனவே இவர் "அன்பின் அப்போஸ்தலர்" என்று அழைக்கப்படுகிறார்.

எபேசுவில் தனது இறுதிகாலத்தை கழிக்கையில் நான்காம் நிரூபத்தை எழுதலானார். இவருடைய நற்செய்தி தனித்தன்மை வாய்ந்தது. நானே என்ற ஏழு புதுமைகளைக் குறிப்பிட்டு இயேசுவின் இறைத்தன்மையை அழகுற காட்டுகிறார்.

அப்போஸ்தலர் யோவான் தனக்கு வயதானதால் நீண்ட நேரம் பிரசங்கிக்க முடியாமல் இருந்தார். விசுவாசிகள் இவரை பல்லக்கில் ஏற்றிக்கொண்டு கூட்டத்திற்கு அழைத்து வருவார்கள். நீண்ட நேரம் பேச முடியாததால், என் பிள்ளைகளே ஒருவரையொருவர் நேசியுங்கள் என்று மீண்டும் மீண்டும் கூறுவார். விசுவாசிகள் இதன் காரணத்தைக் கேட்க இந்த ஒன்றையே செய்யுங்கள் போதும், பாவம் செய்யமாட்டீர்கள் என்பார்.

கி.பி 101-ம் ஆண்டில் தனது முதிர்வயதில் இயற்கையான மரணம் அடைந்தார். அப்போஸ்தலரில் இவர் ஒருவரே இயற்கையான மரணம் அடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்பரே! உங்களை சந்திக்கும் அனைத்து மக்களிடமும் அன்பு செலுத்துகிறீர்களா?

**வாழ்விருந்து வாழ்வுக்கு:-** தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராதவன் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான் - யோவான்

**குயவனின் கரங்களில்:-** ஆண்டவரே! என் முழுவதும் அன்பை பிரதிபலிப்பதாகக் காணப்பட கிருபை தாரும்.

**தியானத்திற்கு:- 2சாமு. 19, எரேமியா 23, ரோமர் 10-11**

## நிகழ்வும் பாடமும்

இயற்கையில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை நிறையவே உண்டு. அதில் சில ரகசியங்களை மட்டும் இன்று பகிர்கிறேன்.


- குதிரைகள் குடிக்கும் நீர்நிலைகளில் இருந்து நீர் அருந்துங்கள்; குதிரை ஒருபோதும் கெட்ட தண்ணீரை குடிக்காது.



- பூனை தூங்கும் இடத்தில் உங்கள் படுக்கையை இடுங்கள்; அமைதி தராத இடத்தில் பூனை உறங்காது.
- புழு துளைத்த கனிகளை உண்ணுங்கள்; நச்சு கனிகளை புழு துளைக்காது.
- பூச்சிகள் உட்கார்ந்திருக்கும் காளானை தைரியமாக உணவாக எடுத்துக்கொள்ளுங்கள்; விஷக்காளான்கள் மீது பூச்சிகள் உட்காராது.
- முயல்கள் குழி பறிக்கும் இடத்தில் மரங்களை நடலாம்; மரம் செழிப்பாக வளரும்.
- பறவைகள் வெப்பத்தை தவிர்க்க ஓய்வெடுக்கும் இடத்தில் உங்களுக்கான நீர் ஊற்றினைத் தோண்டுங்கள்.
- பறவைகள் தூங்கப்போகும் நேரத்தில் தூங்கச் சென்று, அவை விழிக்கும் நேரத்தில் எழுந்திருங்கள். நீங்கள் தொட்டதெல்லாம் பொன்னாகும்.

- அதிகம் இயற்கையான உணவுகளை உண்ணுங்கள். வலுவான கால்களையும், துணிச்சல்மிக்க இதயத்தையும் பெறுவீர்கள்.
- மீன்களைப்போல அடிக்கடி நீரில் நீந்துங்கள். நீங்கள் பூமியில் நடக்கும்போது கூட மீன்களைப்போலவே உணர்வீர்கள்.
- அடிக்கடி வானத்தைப் பாருங்கள். உங்கள் எண்ணங்களில் வெளிச்சமும், தெளிவும் பிறக்கும்.
- நிறைய அமைதியாக இருங்கள். கொஞ்சம் பேசுங்கள். உங்கள் இதயத்தில் மௌனம் குடிகொள்ளும். உங்கள் ஆன்மா எப்போதும் அமைதியாக இருக்கும்.

## செவிகொடுத்தல்




பிறரைக் குறித்து கவலையில்லாமல் தான் மட்டும் வாழவேண்டும் என்ற சுயநலப்போக்கு பெரும்பாலான மனிதரிடமும் காணப்படுகின்றன. யூத மக்களிடமும் இச்சிந்தனை அதிகமாக இருந்ததாக நெகேமியா 5:1-12 முடிய உள்ள வசனங்களில் சொல்லப் பட்டுள்ளன. இந்த சுயநலப் போக்கால் ஏழைகள் மிகவும் ஒடுக்கப்பட்டனர். பஞ்சத்திற்கு பிழைக்க, உணவு வாங்க அவர்களுக்கிருந்த திராட்சத் தோட்டங்களையும், வீடுகளையும் அடமானம் வைத்தனர். செல்வம் படைத்தவர் ஏழைகளிடம் அதிகமான வட்டியை வாங்கினர் (நெகே. 5:7). இந்நிலையினை அறிந்த நெகேமியா சினமுற்றார். அநீதி மற்றும் தீயச் செயல்களுக்காக சினமடையாமல் இருந்தால் தூய்மைக்கேடு பெருகிவிடும் என்பதில் ஐயமில்லை (லூக். 19:45). இச்சூழலில் நெகேமியா ஏழைகளிடம் வாங்கிய நிலங்களையும், திராட்சத் தோட்டங்களையும், ஒலிவத் தோப்புகளையும், வீடுகளையும் நூற்றுக்கு ஒன்று வட்டியாக வாங்கிய பணம், தானியம், திராட்சை இரசம், எண்ணெய் ஆகியவைகளையும், வாங்கியவரிடமே திருப்பிக் கொடுத்துவிட கூறினார். இதனைக் கேட்ட மக்கள் அவருக்கு செவிகொடுத்து நீர் சொன்னபடியே திருப்பிக்கொடுத்துவிடுகிறோம் என உறுதி எடுத்துக்கொண்டனர். தவறு செய்யும் மனிதர் தாம் செய்யும் தவறுகள் உணர்த்தப்படும்போது அவைகளை விட்டு வாழவேண்டும் (லூக்கா 19:1-10).

## ஆண்டவரின் அழைப்பைக் கேட்டு கீழ்ப்படிதல் (1சாமு. 3:10)

கர்த்தருடைய அழைப்பின் சத்தம் வயது வரம்பு மற்றும் அந்தஸ்து வரம்பின்றி யாவருக்கும் வருகிறது. சாமுவேல் மிகச் சிறிய வயதுள்ளவனாய் இருந்தபோதுகூட அவனுக்கு கிடைத்த மேலான அனுபவம் பெரிதானது. தேவ வார்த்தையை கேட்பதற்கும், பெறுவதற்கும், தேவ தரிசனம் காண்பதற்கும் ஏற்ற பரிசுத்தம் அந்த நாட்களில் யாரிடமும் காணப்படவில்லை. மக்கள் தேவனை தேடாமல் அந்நிய தேவர்களை வணங்கி தங்களை கெடுத்துக் கொண்டிருந்தார்கள். சாமுவேல் பணிவிடை செய்து வந்தார். சூழ்நிலை சரியில்லை என்பதற்காக கர்த்தருக்கு பணி செய்யாமல் கடத்துவோர் பலருண்டு. தீர்க்கதரிசனம் சொல்லவோ, தரிசனம் காணவோ ஏற்ற நபர் இல்லை என்ற சூழ்நிலையில் தேவன் ஒரு அனுபவசாலியை அழைக்காமல் சிறுவனை அழைத்தார். மூன்று முறை வந்த அழைப்புக்கு பதிலளிக்குமாறு ஏலி வழிநடத்தினார். சாமுவேலுக்கு தேவ அழைப்பு வந்தது அவன் உண்மையாய் பணிவிடை செய்து கொண்டிருந்தபோதுதான். சோம்பேறிகளை ஆண்டவர் அழைப்பதில்லை. எவருக்குமே கிடைக்காத அரிய வாய்ப்பை சாமுவேல் பெற்றது மேன்மையானதாகும்.

சிறுவன் சாமுவேலுக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பை புரிந்திட சாமுவேலுக்கு இயலவில்லை. ஏலி உதவுகிறார். அழைப்பு மீண்டும் மீண்டும் கொடுக்கப்படுகிறது. உணர்கிறார்; தன்னைத் தருகிறார்; முன்செல்கிறார். ஆண்டவர் ஒவ்வொருவரையும் எவ்விதம் பயன்படுத்த திட்டமிடுகிறார் என்பதை நாம் நம்பிக்கைகளிலும் நம்மோடு வாழும் பிள்ளைகளிலும் காண்போம்.

## ஆண்டவரின் வார்த்தையைக் கேட்டு திடப்படுதல் (1இரா. 19:11)

கிருபையால் உண்டாகும் தெரிந்துகொள்ளுதல் என்பது, எலியா தீர்க்கதரிசியின் நாட்களில் யேசபேல் தேவனுடைய தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாய் எழும்பி அநேகரை கொலை செய்தாள். தான் மாத்திரமே மீதியாக இருப்பதை எண்ணிக்கொண்டு எலியா தீர்க்கதரிசி ஜெபம் பண்ணினார். கர்த்தருடைய தூதன் இரண்டாம் தரம் எலியாவை தட்டி எழுப்பி நீ போகவேண்டிய பிரயாணம் வெகுதூரம். இன்றைய காலத்தில் ஊழியம் செய்யவேண்டிய தூரம் அதிகம் என்கிறார். எலியா படுத்து கிடந்தார். தூதன் தட்டி எழுப்பி பிரயாணம் செல் என்றார்.

கர்த்தருடைய வார்த்தை மனுமக்களை வழிநடத்துகிறது. வார்த்தை ஆதியிலே இந்த உலகத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. வார்த்தை தீர்க்கதரிசிகளை வழிநடத்தியது. கர்த்தருக்கு முன்பாக நிற்கும்போது

பயபக்தி, பக்திவைராக்கியம் போன்றவை தேவை. விசுவாசத்தோடு கடந்து சென்றால் இறைவன் நம்மோடு செயல்படுகிறார்.

திருப்பணியில் வரும் நெருக்கங்கள் பல தருணங்களில் சோர்பு தருபவை. என்ன செய்வது? என எழும்பும் கேள்விகளுக்கு கடவுள் இன்று நமக்குத் தரும் செய்தி **“எழுந்திரு”** என்பது நம்பிக்கையின் செய்தி. எல்லா சோர்புகளுக்கும் விடைகாரணம் போகவேண்டிய தூரம் “வெகுதூரம்”. ஆண்டவரின் வார்த்தையைக் கேட்டு திடப்பட்டு பக்தி வைராக்கியத்துடன் செயல்படுவோமாக.

- **V. G. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## பெண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 88

### ஆகஸ்ட் 2020 மாத கேள்விகள்
### (வெளிப்படுத்தின விசேஷம் 1-11 வரை)

1. தராசைக் கையில் பிடித்திருந்தவன் எந்த குதிரையில் ஏறியிருந்தான்?
2. எதற்கு எட்டியென்று பெயர்?
3. மனுஷரில் எத்தனைபேர் பூமியதிர்ச்சியினால் அழிந்தார்கள்?
4. தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற ஆவிகள் எத்தனை?
5. மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் யார்?
6. தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற ஸ்திரீ யார்?
7. பரலோகத்தில் அரைமணி நேரமளவும் அமைதல் உண்டானது எப்போது?
8. கர்த்தருடைய வாயிலிருந்து எது புறப்பட்டது?
9. வணக்கமாய் விழுந்து உயிரோடு இருக்கிறவரைத் தொழுது கொண்டவர்கள் யார்?
10. தேவரகசியம் எப்போது நிறைவேறும்?
11. அபெத்தோன் என்று பெயர் பெற்றவன் யார்?
12. எந்த சபை தூதன் உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாய் இருக்கிறான்?
13. சுருட்டப்பட்ட புஸ்தகம் போல விலகிபோனது எது?
14. தேவனிடத்திலிருந்து ஜீவஆவி எத்தனை நாட்களுக்குப் பின்பு பிரவேசித்தது?

15. வானவில் பார்வைக்கு எப்படித் தோன்றியது?
16. வெட்டுக்கிளி எங்கிருந்து புறப்பட்டு பூமியின்மேல் வந்தது?
17. இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரங்களில் முத்திரைப் போடப்பட்டவர்கள் எத்தனை பேர்?
18. யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய் சொல்லுகிற கூட்டத்தார் யார்?
19. மங்கின நிறமுள்ள குதிரையின்மேல் இருந்தவன் பெயர் என்ன?
20. பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி யார்?

## ஜுலை 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. துதித்தல் - சங்கீதம் 147:1
2. விண்ணப்பம் - சங்கீதம் 141:2
3. கர்த்தருடைய மகிமை - சங்கீதம் 148:13
4. எங்கள் குமாரத்திகள் - சங்கீதம் 144:12
5. கர்த்தருடைய சொல் - சங்கீதம் 147:154
6. அகங்காரிகள் - சங்கீதம் 140:5
7. தேவன் - சங்கீதம் 146:10
8. கர்த்தர் தயவுசெய்யும்போது - சங்கீதம் 142:7
9. சாந்தகுணமுள்ளவர்களை - சங்கீதம் 149:4
10. கர்த்தர் - சங்கீதம் 145:14, சங்கீதம் 146:8
11. பொல்லாத நாவுள்ளவன் - சங்கீதம் 140:11
12. பரிசுத்தவான் - சங்கீதம் 149:5-8
13. எலும்புகள் - சங்கீதம் 141:7
14. காப்பாற்றுவார் - சங்கீதம் 145:20
15. சத்துரு - சங்கீதம் 143:3
16. துன்மார்க்கருடைய - சங்கீதம் 146:9
17. மனுஷன் - சங்கீதம் 144:4
18. தமது கல்மழையை - சங்கீதம் 147:17
19. ஆத்துமா - சங்கீதம் 143:6
20. நட்சத்திரங்களின் - சங்கீதம் 147:4

## ஜுலை மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Jeya Rani Victor | Mrs. Sapthekha Jerry Sathya |
| Mrs. Ancy Daniel | Mrs. Josephin Anto Kingston | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Ashika Joel | Mrs. Leela Gladson | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Aspin Bejo | Mrs. Manju Martin | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Boopathi Baskar | Mrs. Mary Praveena Gobinath | Mrs. Shiney Johan |
| Mrs. Felsi Rani John | Mrs. Nisha Rajan | Mrs. Sujatha Shalini Jino |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Percy Jean | Mrs. Synthia Srinivas |
| Mrs. Gracilin Melba Sujin | Mrs. Priyadarsini Kanagavel | Mrs. Thamari Johnson |
| Mrs. Jancy Deepa Victor | Mrs. Pushpa Rani Moorthy | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Regin Justa Vinolin | Mrs. Vency Deepa Kannan |

## ஆண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 73

### ஆகஸ்ட் 2020 மாத கேள்விகள்
### (யோபு 32 முதல் 42 வரை)

1. வார்க்கப்பட்ட கண்ணாடியைப்போல் கெட்டியானது எது ?
2. யோபு உயிரோடிருந்த வருஷம் எத்தனை?
3. தூளுக்குத் திரும்புபவன் யார்?
4. மனுஷ சஞ்சாரமில்லாத இடம் எது?
5. பரகெயேலின் குமாரன் யார்?
6. தேவன் எதை தமது கைக்குள்ளே போடுகிறார்?
7. படைச்சால்களை உழ பயன்படுத்த இயலாத விலங்கு எது?
8. தெற்கேயிருந்து என்ன வரும்?
9. புது துருத்திகளை பீறப்பண்ணுகிறது எது?
10. கர்த்தர் மேகத்தை எதற்கு வஸ்திரமாக உடுத்தினார்?
11. யாருடைய சுவாசம் உயிர்கொடுத்தது?
12. கொதிக்கிற சட்டியிலும், கொப்பரையிலும் இருந்து புறப்படுகிறது எது?
13. ஆகாயமண்டலங்களிலுள்ள மப்பை நீங்கப்பண்ணுகிறது எது?
14. எது சர்வவல்லவருக்கு தூரமாயிருக்கிறது?
15. காட்டுக் கழுதையின் வாசஸ்தலம் எது?
16. தேவன் எதற்குச் செவிகொடார்?

17. யோபுவின் மூன்றாம் மகளின் பெயர் என்ன?
18. யாரை குற்றப்படுத்த முடியாது?
19. முத்திரையிடப்பட்ட களிமண்போல் வேறே ரூபங்கொள்ளுவது எது?
20. வாலவயதிலே மாண்டுபோகிறவர்கள் யார்?

## ஜூலை 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. ஞானம் - யோபு 28:18
2. காட்டுக்கழுதைகள் - யோபு 24:5
3. மரணம் - யோபு 30:23
4. துன்மார்க்கன் - யோபு 21:30
5. அனல் - யோபு 31:20
6. வேதப்பிரமாணம் - யோபு 22:22
7. நீதி - யோபு 29:14
8. கர்த்தர் என்னை சோதித்தபின் - யோபு 23:10
9. என் நாசியில் - யோபு 27:2
10. தமது ஆவியினால் - யோபு 26:13
11. ஆக்கினை - யோபு 31:3
12. துன்மார்க்கருடைய பிள்ளைகளுக்கு - யோபு 21:19
13. களை - யோபு 31:40
14. மனிதனும், மனுபுத்திரனும் - யோபு 25:6
15. அக்கிரம மாந்தர் - யோபு 22:15-16
16. என் இருதயம் - யோபு 27:6
17. உறைந்த மழையை - யோபு 24:19
18. செம்பு - யோபு 29:2
19. தண்ணீர்களை - யோபு 26:8
20. பொல்லாப்பை - யோபு 28:28

## ஜூலை மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mr. Alex Baskar | Mr. Jaslin Sundara Kumar | Mr. Lenin Raj |
| Mr. Anshio Shajin | Mr. Jean C. R. Shibin | Mr. Prince J. P. |
| Mr. Anu | Mr. Jino John | Mr. Rajan V. N. |
| Mr. Austin Daniel Raj | Mr. Johan Pratheep | Mr. Ramesh R. |
| Mr. Bejo Nelson | Mr. Justus Martin | Mr. Robin Devadhas |
| Mr. Daniel Raj P. | Mr. Kanagavel | Mr. Sujith Gladson |

## May God Bless All

## Birthday Celebrants – August 2020

| | |
|---|---|
| 01st August | Mrs. Baby Rajakumari, W/o Mr. Immanuel Prince |
| 02nd August | Mr. Jino Retna Kumar |
| 05th August | Mr. S. Augustin Dhayanantha Raj |
| 05th August | Mrs. Rupa, W/o Mr. T.N. Berjin |
| 06th August | Master. Edric Edward, S/o Mr. Edward Sam |
| 13th August | Miss. Jafiya Rubal, D/o Mr. John Yesu Lordson |
| 14th August | Mr. W. Santhosh Christopher |
| 19th August | Mr. G. Anantha Raj |
| 23rd August | Master. Joash, S/o Mr. Vinobha |
| 24th August | Mr. Merlin |
| 28th August | Miss. Alen D. Vijitha, D/o Mr. Devaraj |
| 29th August | Mr. Rejicilin |
| 31st August | Mr. Pratheesh |

## Wedding Day Anniversaries – August 2020

| | |
|---|---|
| 04th August | Mr. Robin Devadhas & Mrs. Golden Irene Sheeja |
| 06th August | Mr. Jones & Mrs. Sumathy |
| 19th August | Mr. Berin Raja & Mrs. Femila |
| 27th August | Mr. Raju & Mrs. Jesintha |

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நமது திருச்சபை போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது திருச்சபையின் முன்னாள் குருவானவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.

- நமது சபைக்கான போதகர் விசா விரைவில் கிடைப்பதற்காகவும் ஜெபிப்போம்.
- சபையின் நிர்வாக குழுவுக்காகவும், அவர்கள் தெய்வ பயத்தோடு திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றிடவும் ஜெபிப்போம்.
- திருச்சபையின் கிளைச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட, நல்ல வளர்ச்சி காண ஜெபிப்போம்.
- எல்லா ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெறவும், பங்கேற்போர் தேவாசீர்வாதம் பெறவும் ஜெபிப்போம்.
- திருச்சபைப் பணிகளை தன்னார்வமாய், உற்சாகமாய் தாங்கிவரும் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.
- பலர் நம்மோடு இணைந்து ஆண்டவரை ஆராதிக்கவும், திருச்சபை புதிய வளர்ச்சி பெறவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள நமது சொந்த திருச்சபைக்காகவும், பேராயங்களுக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், பேராயர், போதகர்கள் குடும்பத்திற்காகவும், திருப்பணி வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நாம் தாங்கிவரும் 11 மிஷனெரிகளுக்காகவும், அவர்கள் தம் பணிக்களங்களில் செய்யும் அருட்பணிகளுக்காகவும், அவர்களது குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் நடைபெறும் எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், பணித்தளங்களில் மிஷனெரிகள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மேற்கொண்டு, தொடர்ந்து தைரியமாய் ஊழியம் செய்ய இறைபெலன் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்காமல் இருக்கிற திருச்சபைகளுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.
- வேதாகம சங்கத்தின் பணிகளுக்காக, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- தொழுகைகள் நடத்த இயலாமல் தடைபடுத்தும் மக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

## தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- தேசத்தலைவர்களுக்காகவும், அரசு அதிகாரிகளுக்காகவும், அதிகாரத்திலுள்ள அனைவரும் நேர்மையும் பயனுள்ள வகையிலும் ஆளுகைசெய்ய ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இன்றைய நம் நாட்டின் எல்லாத் துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் அரசு சலுகைகளை, உரிமைகளைக்கூட சரிவர பெறமுடியாதச் சூழலில், ஊழல் என்னும் தீமை அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- மது என்னும் தீமை இன்றைய சமுதாயத்தையும், குடும்பத்தையும், தனிமனித வாழ்வையும் பெரிதும் பாதித்துவரும் சூழலில் தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டுவரப்பட ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம்.
- வாழ்வில் குறுக்கிடும் துன்பம், தோல்வி, நோய், கடன்பாரம் போன்றவைகளுக்கு தீர்வு தற்கொலையே என்கிற முடிவில் பலர் தங்களுக்கு ஆண்டவர் ஈவாக தந்த உயிரை தாங்களே அழித்து வருகின்றனர். குறிப்பாக இளம் தலைமுறையினரே அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துவரும் சூழலில், தற்கொலை என்னும் தீமை முழுமையாக அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- வேலையின்றி வாடுவோருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க அரசு புதிய தொழில் நிறுவனங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இந்திய தேசத்தின் பொருளாதார வீழ்ச்சி நிலைமாற மன்றாடுவோம்.

## குடும்பங்களுக்காக ஜெபிக்க:-

- இந்த புதிய மாதத்தில் கர்த்தர் நம் ஒவ்வொருவரது குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
- சிறுகுழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், பெற்றோர், முதியோர் என எல்லாரும் ஆண்டவரது கிருபை பெற்றிட ஜெபிப்போம்.
- வியாதி, கடன், வேலை இழப்பு, விசா பிரச்சனை, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை, குழந்தையின்மை, வழக்குகள் இவற்றினால் கஷ்டபடுகிறவர்களுக்காக ஜெபிப்போம்.
- தீய பழக்கமுடையோரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.

- கருவுற்றிருக்கிற சகோதரிகளின் உடல்நலத்திற்காகவும், சுகமான விடுதலைக்காகவும், தாய் சேய் ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.

## சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

### இறைவேண்டல் குறிப்புகள்:-

1. கொரோனா வைரஸின் வீரியம் செயல் இழந்து முழுமையாக அழிக்கப்படவும்.....
2. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோர் முழுமையான விடுதலை பெறவும்.....
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த பயம் அகன்றிடவும்......
4. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் பரவாமலிருக்கவும், அதற்கு மக்கள் முழுமையான ஆதரவு கொடுக்கவும்......
5. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த விழிப்புணர்வுகள், முயற்சிகள் முழுமையான பலனைத் தரவும்......
6. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
7. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய்க்கு எதிராக அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் வாய்க்கவும்......
8. மருத்துவமனையில் பணிசெய்கிற ஊழியர்களுக்காகவும் (Doctors, Nurses மற்றும் அனைத்து உதவி பணியாளர்களுக்காகவும்) மற்றும் சுகாதர துறையில் பணிசெய்கிற அனைத்து பணியாளர்களுக்காகவும்...

9. 210-க்கும் அதிகமான நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது. எல்லா நாடுகளும் பாதுகாக்கப்படவும்.....

10. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....

11. குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்! இனிய வாழ்வு பெறுவோம்!!**

## அனுதின மன்னா – ஆகஸ்ட் 2020

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்டுள்ளது, வாசித்து தியானித்து பயனடையுங்கள். குடும்ப ஜெபத்திற்கு இந்த பகுதியை பயன்படுத்துங்கள்.

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஆகஸ்ட் 1 | சனி | மத்தேயு 7:13-23 | மத்தேயு 7:21 | ஏசாயா 65-66 |
| ஆகஸ்ட் 2 | ஞாயிறு | லூக் 10:38-42 | லூக். 10:42 | எரேமி. 1-4 |
| ஆகஸ்ட் 3 | திங்கள் | எபே. 5:22-25 | எபே. 5:23 | எரேமி. 5-8 |
| ஆகஸ்ட் 4 | செவ்வாய் | ஆதி. 2:23-24 | ஆதி. 2:24 | எரேமி. 9-11 |
| ஆகஸ்ட் 5 | புதன் | ஆதி. 12:1-6 | ஆதி. 12:2 | எரேமி. 12-14 |
| ஆகஸ்ட் 6 | வியாழன் | ஆதி. 39:7-12 | ஆதி. 39:9 | எரேமி. 15-19 |
| **ஆகஸ்ட் 7** | **வெள்ளி** | **1இரா. 21:5-15** | **1இரா. 21:15** | **எரேமி. 20-23** |
| ஆகஸ்ட் 8 | சனி | மத். 27:15-19 | மத். 27:19 | எரேமி. 24-26 |
| ஆகஸ்ட் 9 | ஞாயிறு | பிலிப். 2:5-11 | பிலிப். 2:8 | எரேமி. 27-29 |
| ஆகஸ்ட் 10 | திங்கள் | லூக். 24:45-48 | லூக். 24:48 | எரேமி. 30-31 |
| ஆகஸ்ட் 11 | செவ்வாய் | மாற்கு 16:19-20 | மாற். 16:20 | எரேமி. 32-34 |
| ஆகஸ்ட் 12 | புதன் | மத். 28:18-20 | மத். 28:20 | எரேமி. 35-37 |
| ஆகஸ்ட் 13 | வியாழன் | அப். 9:10-16 | அப். 9:15 | எரேமி. 38-41 |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| **ஆகஸ்ட் 14** | **வெள்ளி** | **அப். 10:34-43** | **அப். 10:35** | **எரேமி. 42-45** |
| ஆகஸ்ட் 15 | சனி | யாத். 23:1-9 | யாத். 23:6 | எரேமி. 46-48 |
| ஆகஸ்ட் 16 | ஞாயிறு | யோவான் 3:1-8 | யோவான் 3:7 | எரேமி. 49 |
| ஆகஸ்ட் 17 | திங்கள் | மாற்கு 1:2-5 | மாற்கு 1:5 | எரேமி. 50 |
| ஆகஸ்ட் 18 | செவ்வாய் | மத்தேயு 3:13-17 | மத். 3:16,17 | எரேமி. 51-52 |
| ஆகஸ்ட் 19 | புதன் | அப். 1:3-5 | அப். 1:4 | புலம்பல் 1-2 |
| ஆகஸ்ட் 20 | வியாழன் | அப். 2:41-42 | அப். 2:41 | புலம்பல் 3-5 |
| **ஆகஸ்ட் 21** | **வெள்ளி** | **எபே. 4:1-6** | **எபே. 4:5** | **எசேக். 1-4** |
| ஆகஸ்ட் 22 | சனி | அப். 8:34-38 | அப். 8:37 | எசேக். 5-9 |
| ஆகஸ்ட் 23 | ஞாயிறு | மாற்கு 14:12-26 | மாற்கு 14:24 | எசேக். 10-13 |
| ஆகஸ்ட் 24 | திங்கள் | மத். 26:17-28 | மத்தேயு 26:28 | எசேக். 14-16 |
| ஆகஸ்ட் 25 | செவ்வாய் | லூக். 22:14-20 | லூக்கா 22:19 | எசேக். 17-19 |
| ஆகஸ்ட் 26 | புதன் | யோவா. 13:1-15 | யோவா. 13:15 | எசேக். 20-21 |
| ஆகஸ்ட் 27 | வியாழன் | 1கொரி.10:15-17 | 1கொரி.10:17 | எசேக். 22-23 |
| **ஆகஸ்ட் 28** | **வெள்ளி** | **1கொரி.11:27-31** | **1கொரி.11:28** | **எசேக். 24-26** |
| ஆகஸ்ட் 29 | சனி | லூக். 22:15-20 | லூக்கா 22:17 | எசேக். 27-28 |
| ஆகஸ்ட் 30 | ஞாயிறு | தானி. 1:1-21 | தானி. 1:17 | எசேக். 29-31 |
| ஆகஸ்ட் 31 | திங்கள் | 1பேதுரு 2:4-10 | 1பேதுரு 2:9 | எசேக். 32-33 |
| செப்டம்பர் 1 | செவ்வாய் | 1கொரி.12:14-26 | 1கொரி.12:22 | எசேக். 34-36 |
| செப்டம்பர் 2 | புதன் | கலா. 6:1-10 | கலா. 6:9 | எசேக். 37-39 |
| செப்டம்பர் 3 | வியாழன் | அப். 4:32-37 | அப். 4:32 | எசேக். 40-42 |
| **செப்டம்பர் 4** | **வெள்ளி** | **1பேதுரு 4:7-11** | **1பேதுரு 4:8** | **எசேக். 43-45** |

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**